## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.32/2023

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அனுசுயா | மதம் | : இந்து |
| க/பெ | : ராமசந்திரன் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 72 | கிராமம் | : ராஜபத்மாபுரம் |
| தொழில் | : இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**27.01.2025**

**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.221/13 ஆகும். வழக்கு சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. 71.8 மீட்டர் ஆகும். அது கிழக்கு மேற்கா, வடக்கு தெற்கா என்றால் கிழக்கு மேற்கு ஆகும். வடக்கு தெற்கு எத்தனை மீட்டர் என்றால் கிழமேல் 11. அளவு ஆகும். அந்த புள்ளிக்கு அடுத்து என்ன அளவு என்று தெரியவில்லை. அது அடியா மீட்டரா என்றால் மீட்டர் ஆகும். நான் வழக்கில் எ அட்டவணை பி அட்டவணை என இரண்டு அட்டவணை சொத்துக்களை காட்டியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எ அட்டவணை சொத்து என்ன என்றால் வீடு ஆகும். பி அட்டவணை சொத்தில் வீடு கட்டியுள்ளார்கள். யார் வீடு கட்டியுள்ளார் என்றால் நாராயணன் வீடு கட்டியுள்ளார்.

2. நான் மேற்படி சொன்ன 71.8 மீட்டர், 11 அளவிலுள்ளவை என்ன அட்டவணை சொத்து என்றால் எ அட்டவணை சொத்து ஆகும். நீளம் 71.8 அகலம் 11 மற்றும் சிறிது அளவு ஆகும். அந்த புள்ளிக்கு அடுத்து என்ன அளவு என்று தெரியவில்லை. எ அட்டவணை சொத்தின் ஒரு பகுதி தான் பி அட்டவணை சொத்து என்றால் ஆமாம். பி அட்டவணை சொத்தின் அளவு தெரியுமா என்றால் கிழமேல் 21.5 ஆகும். அது அடியா மீட்டரா என்றால் ஞாபகமில்லை. வடக்கு தெற்கு 9 ஆகும். அது அடியா மீட்டரா என்றால் ஞாபகமில்லை. நான் என் பிரமாண வாக்குமூலத்தில்

சொல்லியுள்ள அளவிற்கும் பிராதில் சொல்லியுள்ள அளவிற்கும் நன் தற்போது சொல்லும் அளவிற்கும் மூன்றிற்கும் வித்தியாசம் உள்ளது என்றால் இல்லை.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 ல் கிழக்கு மேற்கு 11.2 அடிகள், வடக்கு தெற்கு 71 அடிகள் என அடியளவு சொல்லிவிட்டு தற்போது மீட்டர் என சாட்சியம் அளிப்பதில் எது சரியானது என்றால் நான் தற்போது சொல்வதுதான் சரி. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது தவறு என்றால் அடி என சொல்லியிருப்பது தவறுதான். மீட்டர்தான் சரி. எனது பிராதிலும் கிழக்கு மேற்கு 11.2 அடிகள், வடக்கு தெற்கு 71 அடிகள் என அடியளவு சொல்லியுள்ளேன் என்றாலும் மீட்டர் என சொல்லவில்லை என்றாலும் சரிதான். ஆனால் மீட்டர்தான் சரி. அடி என குறிப்பிட்டு இருப்பது தவறு.

4. நான் எனது உரிமையை பி அட்டவணை சொத்தை பொறுத்து மட்டும்தான் கேட்டுள்ளேன் என்றாலும் எ அட்டவணை சொத்தை பொறுத்து கேட்கவில்லை என்றாலும் அவர் வீடு கட்டியதால்தான் நான் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்த சொத்தையும் உரிமை கேட்காமல் ஒரு சிறு பகுதியை மட்டும் உரிமைகேட்பது சரியா என்றால் அவர் வீடு கட்டியதால் அவர் வீடு கட்டிய இடத்திற்கு கேட்டுள்ளேன். நான் முழு சொத்திற்கும் உரிமைகேட்காததால் என் வழக்கு தவறானது என்றால் சரியல்ல.

5. எனது வழக்கிலும் பிரமாண வாக்குமூலத்திலும் பரிகாரத்திலும் தவறாக உள்ளதால் என் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் மாமியார் பெயர் என்ன என்றால் புஷ்பாவதியம்மாள் ஆவார். பிரதிவாதி நாராயணன் அப்பா பெயர் கோவிந்தசாமி நாயுடு ஆகும். அவரை சின்ன கோவிந்தசாமி நாயுடு என கூப்பிடுவார்கள் என்றால் ஆமாம். எனக்கும் சின்ன கோவிந்தசாமி நாயுடுக்கும் ஏற்கனவே இந்த மனையை பொறுத்து வழக்கு இருந்தது என்றால் 6 பேர் மீது வழக்கு போட்டார்கள். அதில் தீர்ப்பானது என்று அவர் கையில் நகல் வைத்துள்ளார். அந்த வழக்கு இந்த நீதிமன்றத்தில் நடந்ததா என்றால் நாங்கள் யாரும் வரவில்லை. என் கணவர் மட்டும் வந்தார்.

6. முன் வழக்கு எண்.114/1967 என்றால் வழக்கு தாக்கல் செய்தார்கள். வழக்கு எண் ஞாபகமில்லை. என் மாமியார், என் மாமியாரின் தாயார், என் கணவர், நான், மற்றும் ஊரில் 2 பேர் மீது அந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. முன் வழக்கு

எண்.114/1967 ல் சமரச உடன்படிக்கைப்படி வழக்கு முடிக்கப்பட்டது என்றால் சமரசமாக முடிந்தது. அதன்பின்பு மேல்முறையீட்டில் எங்களை சிறையில் அடைக்க சின்ன கோவிந்தசாமி வழக்கு செய்தார். அந்த வழக்கு எங்கள் இடத்தில் அவர் வர முடியாது என்று தள்ளுபடி ஆகிவிட்டது. சின்ன கோவிந்தசாமி இதே இடம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து அது அவருக்கு பாத்தியம் என முடிவாகியுள்ளது என்றாலும் அதில் நாங்கள் அனைவரும் கையெழுத்து செய்துள்ளோம் என்றாலும் நாங்கள் யாரும் கையெழுத்து போடவில்லை. மேற்படி வழக்கு விவரம் எனக்கு தெரியும் என்றாலும் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் நாங்கள் 6 பேரில் யாரும் கையெழுத்து போடவில்லை.

7. இந்த வழக்கு இதே இடம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து அது பிரதிவாதியின் தகப்பனாருக்கு பாத்தியம் என முடிவாகியுள்ளது என்றாலும் மீண்டும் அதே இடம் தொடர்பாக வழக்கு தாக்கல் செய்ய முன் தீர்ப்பு தடையால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)